# பிறந்தநாள், சதாபிஷேக வாழ்த்து!

திரு. **கா.வி. ஸ்ரீனிவாச மூர்த்தி** அவர்களுக்கு

(**அகவை எண்பது** – 02-02-2026)



சீர்மிகு சென்னையில் பணியுமாகி **சுங்க இல்லம்**
சேர்ந்து பணியில் நகரும் காலை கண்டேன்;
சீர்கொண்டு நாளும் மனத்தில் வாழும் அன்பின்
சீர்வளர் பெருந்தகை **ஸ்ரீனிவாச மூர்த்தி** அவர்களையே!

வார்த்த சட்டமதை வகைப் படுத்தி மனதிலேற்றி,
கூர்த்தமதி கொண்டாலே பணியதுவும் வெற்றியாகும்!
பார்மிசை அறிவுகொண்டு பயணித்த சிலரில் ஒருவர்!
சீர்கொண்ட பணியின் செவ்வனே முடிந்த பின்னும்,



சிதையாமல் தொடருகின்றோம் தமிழைச் சூடி!
அதிகார வரம்பின்றி என்றும் அன்பால் நிறைவார்!
ஆங்கன்று கற்றவைதாம் பின்னாளில் எனையுயர்த்த,
சுங்கப் பணியதுவும் சுகமாய் நிறைவைக் கண்டதுவே!

அங்கவரும் **உதவி ஆட்சியராய்** ஆகி, பின்னே,
சிங்கமென வெளியேறி முறைமன்றில் பயணித்தார்!
தங்குதடையின்றி நகர்ந்தாலும் காலத்தை வரையிட்டு,
தன்கடமை வேறெனவாய் அப்பணியை முடித்து,



பொன்நிகர்த்த எழுத்துப் பணியில் அர்ப்பணித்து,
வண்ணமெனத் தமிழில் பலநூல்கள் செய்திட்டார்!
திண்ணமாய் ஆய்வுரைகள் திகட்டாத நல்லமுதம்!
அன்னவன் பாரதியின் அடியொற்றி வாழ்வதினால்,

எண்ணிறந்த படைப்புகளைச் செய்கின்றார்!
இன்னும் பலவும் செய்து மகிழல் வேண்டும்!
இன்றிந்த இளைஞருக்கு **அகவை எண்பது.**
இன்னும் பல்லாண்டு வாழ்தல் வேண்டும்!



தென் தமிழைத் தேன் தமிழாய்ச் செய்திட,
பொன்நிகர்த்த பொலிவு கொள்ளும் தமிழே!
தன்னிகரில்லா மகிழ்வைச் சூடல் வேண்டும்!
என்றே யானும் வாழ்த்தி மனம் மகிழ்வேனே!

எந்நாளும் மகிழ்த்தும் அன்புடன்,
**கு.ப. அசோகன்** 27-01-2026 (இரவு 11.05)